மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

OS No: 1119/2015

Date : 20.08.2025 பி.சா. 1 செந்தில்நாதன்

**பி.சா.1 முன்னிலை. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனக்கு சித்தப்பா மகன் ஆவார். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்து சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது அப்பா ஆவார். அவர் வழக்கு நடந்து கொண்டிருந்த போது இறந்து விட்டதால் 7 முதல் 10 பிரதிவாதிகளை வாரிசுதாரரகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாரும் இறந்து விட்டார். அப்பாயி ராசாத்தி அம்மாள் 2013 ல் இறந்து விட்டார். எனது அப்பாயி ராசாத்தி அம்மாள் 02.09.2014 ம் தேதி காலமாகி விட்டார் என்றும் எனக்கு இறந்த தேதி தெரியவில்லை என்றால் சரிதான். சத்திய பிரமாண வாக்குமூலம் 8-ம் பாராவில் சொல்லியுள்ள சங்கதி சரிதான் என்றால் சரிதான். வழக்கின் வாதி மனோஜ்குமார் நான் 8ம் பாராவில் சொல்லியுள்ள சங்கதிகளை கூறி ராசாத்தி அம்மாள் எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் சொத்தை பாகம் கேட்கிறார் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட உயிலில் சாட்சியாக எனது அத்தை 6ம் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2 முதல் 6 வரை சொத்தை பிரித்து கொள்ள ஆட்சேபனை இல்லை என குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனது அப்பாவும் நானும் மட்டும் தான் கட்சி நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர்களிடையே தற்போது வரை பிரச்சனை நடந்து கொண்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா அண்ணாசாமி அவருக்கு கிடைத்த பாகச் சொத்தை ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அப்பா அவரது தாயார் ராசாத்தி அம்மாவுடன் நல்ல உறவில் தான் இருந்தார் என்றால் சரிதான். ராசாத்தி அம்மாள் சொத்து குறித்து எதாவது செய்தால் எனது அப்பாவிடம் சொல்வாரா என்றால் சொல்லமாட்டார். எனது அப்பா தாக்கல் செய்த எதிருரையில் உயில் குறித்து என்ன கட்சி எடுத்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். எனது எதிர் வழக்குரை மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் ராசாத்தி அம்மாள் எழுதி வைத்த உயில் உண்மை என்றும் ஆனால் கிருஷ்ணன் தூண்டுதலின் பேரில் மேற்படி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP040022752015/truecopy/order-4.pdf

ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ராசாத்தி அம்மாள் தன்னுடைய பாகத்தை வாரிசுதாரர் என்ற அடிப்படையில் தன்னுடைய மகன் வயிற்று பேரனான வாதிக்கு தன்னுடைய பங்கை எழுதி வைத்த உயிலானது முறைப்படி ஏற்படுத்திக் கொடுத்த உயில் என்பதால் 1/5 பாகமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் எனது அப்பா மற்றும் அம்மா ஆகிய மூவரும் தனிக்குடித்தனமாக சென்றுவிட்ட நிலையிலும் என்னுடைய அப்பாயி வாதி தான் பராமரித்து வந்தார் என்பதால் தன்னுடைய பாகத்தை ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் மூலமாக வாதிக்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. சொத்தை பிரித்து தரக் கூடாது என்பதற்காகவும் மற்ற வழக்கின் தரப்பினர்கள் சொத்துக்களை அடையக்கூடாது என்பதற்காவும் பொய்யான காரணங்களை கூறி கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கின் தரப்பினர்களுக்கு தற்போது தேவைகள் அதிகமாக இருப்பதாலும் சொத்தினை பிரித்து தரக்கோரி பலமுறை 1 வது பிரதிவாதியிடம் கோரிக்கை வைத்து சொத்தை பிரித்து கொள்ள முன்வராததால் இந்த தாவா வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சி விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளித்து என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

Sd/- J. Kannan

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP040022752015/truecopy/order-4.pdf